பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**10 12 2025 WEDNESDAY 6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** ”உங்கள் பணம் — உங்கள் உரிமை” இயக்கத்தை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

**2)** நாடு முழுவதும் **212** சமுதாய வானொலி நிலையங்கள் செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

**3)** தமிழகத்தில் **99** புள்ளி ஒன்பது ஒன்பது சதவீத வாக்காளர் கணக்கீட்டுப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**4)** மணல் கொள்ளையை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம், தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

**5)** ஆசிய பாரா இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் **Abdul Qadir Indori** தங்கப்பதக்கம் வென்றார்.

இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

மத்திய அரசின் "உங்கள் பணம் — உங்கள் உரிமை" இயக்கத்தை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

சமூக வலைளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், உரிமை கோரப்படாத முதலீட்டுத் தொகைகளை திரும்பப்பெறுவதற்கு உதவிடும் வகையில் இந்த இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

<<<<<>>>>>

நாடு முழுவதும் 212 சமுதாய வானொலி நிலையங்கள் செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், சமுதாய வானொலி கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

<<<<<>>>>>

தஞ்சாவூர் மாவட்டம் நடுவூரில் நவீன நெல் சேமிப்பு தளங்கள் அமைப்பதற்காக 170 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு கோவி செழியன் கூறியுள்ளார்.

இன்று இதற்கான கட்டுமானப்பணிகள் தொடக்க விழாவில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(***Sound Byte — கோவி. செழியன் — 31 Sec.*** )

<<<<<>>>>>

தமிழகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ், இதுவரை 99 புள்ளி ஒன்பது ஒன்பது சதவீத கணக்கீட்டுப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்படி, 6 கோடியே, 41 லட்சத்து 10 ஆயிரத்து 380 கணக்கீட்டுப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில், 99 புள்ளி ஒன்பது ஐந்து சதவீத கணக்கீட்டுப் படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தேனி மாவட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — ராஜ்குமார் — 56 Sec. )***

<<<<<>>>>>

மணல் கொள்ளையை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம், தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு எஸ் எம் சுப்பிரமணியம், திரு சி குமரப்பன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

கனிம வளங்கள் நாட்டின் சொத்து என்றும் அவற்றை கொள்ளையடிக்க அனுமதிக்க முடியாது என்று கூறிய நீதிபதிகள், வழக்கின் விசாரணையை அடுத்த வாரத்திற்கு ஒத்திவைத்தனர்.

<<<<<>>>>>

மத்திய அரசு கொண்டுவந்துள்ள நான்கு புதிய தொழிலாளர் நலச்சட்டங்கள் அவர்களின் பணி பாதுகாப்பை உறுதி செய்ய உதவிடும் என்று மதுரை மண்டல தொழிலாளர் நல ஆணையர் திரு பிரவீன் பாண்டி மோகன்தாஸ் கூறியுள்ளார்.

இன்று தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — பிரவீன் பாண்டி மோகன்தாஸ் — 47 Sec.)***

<<<<<>>>>>

மேட்டூர் அணையின் **16** கண் மதகு பகுதியில் பச்சை நிற பாசிகளை கட்டுப்படுத்த திறனூட்டப்பட்ட நுண்ணுயிர் கலவை தெளிக்கும் பணி நடைபெற்றது.

இதன்மூலம் பாசிகள் முழுமையாக கட்டுப்படுத்தப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — விஜய்குமார் - 32 Sec. )***

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆட்சியர் திரு பிரவீன்குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-----------------

திருப்பரங்குன்றம் மலையில் தொல்லியல் துறையின் ஏழு பேர் கொண்ட குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

-------------------

தூத்துக்குடியில் இருந்து விரைவில் தில்லி, மும்பை உள்ளிட்ட நகரங்களுக்கு பெரிய விமானங்கள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு

வருவதாக தூத்துக்குடி விமான நிலைய இயக்குனர் திரு அனூப் கூறியுள்ளார்.

----------------

திருச்சியில் கடந்த 3 நாட்களாக விமான சேவை எதுவும் ரத்து செய்யப்படவில்லை என்ற விமான நிலைய இயக்குனர் திரு ராஜூ கூறியுள்ளார்.

---------------------

காஞ்சிபுரம் மாவட்டம் செவிலிமேடு பகுதியில் புதிய துணை அஞ்சலகம் இன்று திறக்கப்பட்டது.

------------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் அனுமதியின்றி வண்டல்மண் எடுத்த லாரி ஓட்டுநர்கள் ஐந்து பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

----------------------

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் — வத்லகுண்டு இடையேயான மலை சாலையில் இரண்டு இடங்களில் ராட்சத மரங்கள் முறிந்து விழுந்ததில் அந்த வழித்தடத்தில் சுமார் ஒரு மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

-------------------

**தருமபுரியில் மனித உரிமைகள் தின விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.**

-------------------

**சென்னை மாநகர காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர் முகாம் இன்று நடைபெற்றது.**

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய பாரா இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் **Abdul Qadir Indori** தங்கப்பதக்கம் வென்றார்.

துபாயில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் நீச்சல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------------

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் ரோஹித் சர்மா முதலிடத்தில் நீடிக்கிறார்.

விராட் கோலி இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

-------------------

ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Unnati Hooda** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-12, 21-18,** என்ற செட் கணக்கில் ஐக்கிய அரபு எமிரேட்டின் **Prakriti-**ஐ வென்றார்.

**Anupama Upathyaya, Isharani Baruva, Aditi Bhat, Tanya Hemant, Shriyanshi** ஆகியோர் மகளிர் ஒற்றையர் பிரிவிலும், **Arya Bhivpathaki, Priyanshu Rajavat, Shankar Muthusamy Subramaniyan** ஆகியோர் ஆடவர் ஒற்றையர் பிரிவிலும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

--------------------

இந்தியா — தென்னாப்பிரிக்கா இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஹாக்கிப்போட்டி கேப்டவுனில் இன்று நடைபெறுகிறது.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரில் இந்தியா **1-0** என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

**<<<<END>>>>>**